**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள் *:02.09.2024*
பி.வா.சா.*1* -ராஜசேகர்
*O.S No.336/2022 :*

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

என் தகப்பனார் பாகத்திற்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை, நான் அப்போது பிறக்கவில்லை. பாகம் பிரிக்கப்பட்டது என் தகப்பனார் கூறி எனக்கு தெரியும். ஆனால் என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. என் பெரியப்பா சுப்பிரமணியன் பாகத்திற்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. *1*ம் பிரதிவாதி ரவி எனது பெரியப்பா மகன் ஆவார். அவர் இந்த வழக்கில் முன்னிலையாகவில்லை என்றால் சரிதான். *3*ம் பிரதிவாதி கண்ணனும், *6*ம் பிரதிவாதி பாலனும் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்பதை எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது பாதி உண்மை, பாதி பொய்யாகும். வழக்கு சொத்துக்கள் பிரதிவாதி குறிப்பிட்டுள்ள *3*ம் பிரதிவாதிக்கும், *6*ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்ட அவர்கள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள *33* முதல் *37* இன சொத்துக்களும் *39* மற்றும் *46* இன சொத்துக்களும் ஆகும் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்வழக்குரை காட்டப்பட்டு, அதில் *33* முதல் *37* இன சொத்துக்களும் *39* மற்றும் *46* இன சொத்துக்களும் வழக்கு சொத்துக்கள் தான் என்று சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி வழக்கு சொத்துக்களை *3* மற்றும் *6*ம் பிரதிவாதி தற்போது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் என் தந்தைக்கு பிறகு அவர்கள் பாகம் பிரிக்கப்படாததால் அனுபவித்து வருகிறார்கள். பாகம் பிரித்த காலம் முதல் சுமார் *40* ஆண்டு காலமாக *3* மற்றும் *6*ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் வழக்கு சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நானோ, என்

தந்தையோ அனுபவித்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. *3* மற்றும் *6*ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் தற்போது கரும்பு பயிர் செய்து வருகிறார்கள் என்றால் என் தந்தைக்கு பிறகு *3* மற்றும் *6* ம் பிரதிவாதி பயிர் செய்து வருகிறார்கள். கரும்பு விவசாயம் செய்வதால் அலங்காநல்லூர் கரும்பாலையில் வழக்கு சொத்தில் கரும்பு இருப்பதாக பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என் தந்தையோ, நானோ வழக்கு சொத்தில் பயிரிடுவதற்காக பதிவு செய்துள்ளோமா என்றால் நாங்கள் கரும்பு பயிர் செய்யவில்லை, நெல் பயிரிட்டோம். எனக்கு தற்போது *42* வயதாகிறது. எனக்கு *10* வயது இருக்கும் வரை வழக்கு சொத்தை நாங்கள் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தோம். அதன்பிறகு நான் வெளிநாடு சென்றுவிட்டேன் நான் பயிர் செய்யவில்லை. கடந்த *32* வருடங்களாக நாங்கள் பங்கு கேட்டோம், பிரதிவாதிகள் கொடுக்கவில்லை, நாங்கள் பயிர் செய்யவில்லை. என் சித்தப்பா கண்ணன் மற்றும் பாலன் தான் விவசாயம் செய்து வருகிறார்கள், இதுவரை எங்களது பங்கை கொடுக்கவில்லை. குடும்ப பாகவஸ்தியில் *3* மற்றும் *6* ம் பிரதிவாதி பாகத்திற்கு தான் வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றும், நாங்கள் தற்போது பொய்யாக வழக்கை தாக்கல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலவதியாகிவிட்டதால் தள்ளுப்படிக்குரியது என்றால் சரியல்ல. என் பெரியப்பா சுப்பிரமணியனின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை ; இல்லை.

*Sd/-M.Samundeeswari prabha*
*Sub Judge,*
*Melur.*